# இலட்சியவாதி அழகிரிசாமி

★

காஞ்சி. கல்யாணசுந்தரன்

★

(30—3—50 பேராவூரணியில் நடைபெற்ற அழகிரிசாமியின் முதல் ஆண்டு நினைவு நாள் விழாவின் போது, பேராவூரணி தோழர்கள் குழந்தை, அடைக்கலம் ஆகியவர்களால் வெளியிடப்பெற்றது).

★

1950

('போர்வாள்' 25—3—50, 1—4—50, இதழ்களில் வெளிவந்த தலையங்கத் தொகுப்பு.)

24416

# இலட்சியவாதி - - அழகிரிசாமி

நாடு ஆங்கிலேயரின் பிடியில்! அரசியலில் அவர்கள் ஆதிக்கம். ஆத்மார்த்தத்துறையின் அதிபர்களாக ஆரியர்கள் இருக்கிறார்கள். ஆயிரம் ஜாதிகளாக மக்கள் சிதறிக் கிடக்கிறார்கள். எச்சிலையைக் காணும்போதுதான் குக்கல் குலப்பகையை மிகையாகக் காட்டிக்கொள்ளுமேயன்றி மற்றக் காலத்தில் அவ்வளவாகக் காட்டிக்கொள்ளாது. ஆனால் ஜாதீய உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டவர்கள் ஒருவரைக் குறித்து ஒருவர் நினைக்கும்பொழுதே பகை மூண்டெழும் ஒவ்வொருவர் உள்ளத்திலும். மனிதனை மனிதன் தாழ்த்தியும், இழித்தும், குறைத்தும் மதிப்பிட்டுக்கொண்டு, மனிதப்பண்பைப் பெறமுடியாமலும், வளர்க்கமுடியாமலும், மனிதமேம்பாட்டை உணரமுடியாமலும், பிறக்கும் நாள்முதல் இறக்கும் வரையில் இருந்து தொலையட்டுமென்ற, தீய சிந்தனையோடு, தந்திரமாக ஏற்பாடுசெய்து வைத்த, சதிச் செயல்தான் ஜாதீய ஏற்பாடு. நான்கு ஜாதி, காலப்போக்கில் நாலாயிரம் ஜாதிகளாக வளர்ந்துவிட்டன. நாட்டுக்கு ஆரியம் தந்த கொடுமையான திட்டம் இது. மக்கள் குலத்துக்கு, அது செய்த, மகத்தான துரோகம் இது.

இந்த வருணாஸ்ரம வலையில் சிக்கிய வாள் பிடித்த வீரனும் கோழையாவான்—விவேகியும் வீணனாவான்—சகலகலா பண்டிதனும் சர்வசூன்யனாவான்! இச்சனாதன ஏற்பாட்டால் சமத்துவம் பேசுவோன் சதிகாரனாக மதிக்கப்படுவான்—சுதந்திரம் கோருபவன் சூழ்ச்சிக்காரனாகக்

கருதப்படுவான்—சகோதரத்துவம் சாதிப்போன் சகல நாசத்திற்கும் இருப்பிடம் என்று செப்பப்படுவான்! இதனால், உழைப்பாளி உலுத்தனாக பழிக்கப்படுவான்—அவன் உழைப்பைத் தின்று கொழுப்போன் உத்தமனாகக் கொள்ளப்படுவான்—சோம்பேறி உலக வழிகாட்டியாகப் புகழப்படுவான்! இந்தச் சர்வநாச திட்டத்தை சர்வேஸ்வரன் தந்தது என்ற நினைப்பில் நாட்டுமக்கள் நலிந்து வருகிறார்கள்.

மதப்போர் மற்றோர் பக்கம், மக்களை ஒன்றுபட விடாமல், பிளவு படுத்திக்கொண்டு இருக்கிறது. மதத்துக்குள்ளாகவே பல்வேறு குட்டி மதங்கள். வைஷ்ணவம் சைவத்தை வாதுக்கிழுக்கும், சைவம் வைஷ்ணவத்தை வம்புக்கிழுக்கும். எங்கணும் மதப்பூசல். மனிதனிடம் மறைந்துகிடக்கும் சக்தியை—ஆற்றலை சிறப்பித்துக்கூறும் மார்க்கம் எதுவும் இல்லை. மனிதனைக் கையாலாகாதவன் என்று வலியுறுத்திக் கூறுவனவே எல்லாக் கோட்பாடுகளும்.

காண்கின்ற உலகம் பொய்—வாழ்வு மாயம்—நித்திய மற்றது—அழியக்கூடியது—மனைவி மக்கள் பொய்—மாட மாளிகைகள் பொய்—நீயும் பொய் நானும் பொய்—'அவன்' ஒருவனே நித்தியம் என்ற கடைக்கால் இல்லாத கருத்து மக்களின் ஏழ்மையைப் பலமாகப் பற்றிக்கொண்டு இருக்கிறது. இதன் விளைவாக முயற்சி குன்றி, நல்வாழ்வு பெறவேண்டுமென்ற எண்ணம் தேய்ந்து, வாழ்விலே விருப்பம் குறைந்து, பிறர் சுரண்டுவதைப் பார்த்தும் பேசாதிருந்து, மரணத்துக்கு வாழ்த்துக் கூறி வரவேற்பளிக்கும் வரட்டுத் தன்மையைப் பெற்றுவிட்டது நமது மக்கள் கூட்டம்.

ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து, நாட்டை விடுவிக்க வேண்டுமென்ற நினைப்புத் தோன்றுவது இயற்கையேயாகும். அந்த இயற்கை விதியின்படி நாட்டில் நல்லறிவாளர்கள் பலர் தோன்றினர். நாட்டு மக்களின் தேக்கமான

நிலையும் குலைந்தது. ஜனசக்தி உக்கிரமாக எழுந்தது. ஆங்கில ஆட்சியும் அகன்றது. சுயாட்சியும் சித்தியாயிற்று. சுயாட்சியின் பெயரால் சர்வாதிகாரம் நடைபெறுமானால், சுதந்திரக்காப்பு என்று கூறி சுதந்திரப் பறிப்பு நடைபெறுமானால், சுகவாழ்வு தரப்படும் என்று கூறி சுரண்டல் பணி நடைபெறுமானால், இவைகளை விலக்க, விரட்ட, பொதுஜன சக்தி திரண்டு எழுவதும் இயற்கை விதியேயாகும், இந்நிலை அநீதியானதும் அல்ல —விரும்பக்கூடாதது மல்ல—தோல்வி அடைந்துவிடக் கூடியதுமல்ல.

சனாதனத்தால் சீரழிந்து வருவோர், வருணாஸ்ரமத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளோர், ஜாதீய கோட்பாட்டால் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளோர், தங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள, இழிவைப் போக்கிக் கொள்ள, ஒன்றுபட்டு எழுந்து முயற்சிப்பது, இயற்கைக்கு விரோதமானதுமல்ல—வெற்றிபெறக் கூடாதது மல்ல.

அறிவு முதிர்ச்சி அடையாத காலத்தில், காட்டுமிராண்டியாகக் காட்டிலே காலங்கழித்து வந்த காட்டு மனிதன், குகையிலே குடியிருக்க முனைந்தது, வன விலங்குகளின் கொடுமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத்தான். பனி, மழை, வெய்யில் முதலிய இயற்கையின் தாக்குதலிலிருந்து தப்பத்தான் குடிசை அமைத்துக் கொண்டான் அந்தக் காலத்து மனிதன். தற்கால ஆயுதங்களும், அக்கிரமத்திலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, காட்டு மனிதன் எடுத்துக் கொண்ட முயற்சியின் தன்மையைத்தான் மெய்ப்பிக்கின்றன.

எனவே, ஆதிக்கம், அறிவு, அக்கிரமம், சர்வாதிகாரம், அனைத்துக்கும் எதிர்ப்பு என்றைக்கிருந்தாலும் ஏற்பட்டே தீரும் என்பதும், அவைகள் இறுதியில் ஒழிக்கப்பட்டே போகும் என்பதும், அவைகளை அழிப்பதற்கான சக்தியும், அவைகளிடத்திலேயே பிறந்து வளர்ந்து வரு

இன்றது என்பதும், விஞ்ஞான முடிவுகளாகும். இந்த முடிவை மாற்றி அமைப்பது அவ்வளவு இலகுவான காரியம் அன்று. இந்த இயற்கை நீதியின்படி எழுந்ததுதான் வர்ணாஸ்ரம எதிர்ப்பு— பகுத்தறிவுப் பிரசாரம் — சுய மரியாதை இயக்கம், அந்த எதிர்ப்பு உணர்ச்சியின் சிறு சிறு கூறுகள் தான் நாம் அனைவரும். **மறைந்த மாவீரன் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி, அதில் ஒரு சிறு பொறி.** சனாதனம் தோன்றாமல் இருந்திருந்தால், வருணாஸ்ரமம் வலிவோடு இல்லாமலிருந்திருந்தால், ஜாதீயக் கோட்பாட்டின் பலம் சிரழிந்து போயிருந்தால், **அழகிரிசாமியை** நாம் அறிந்து கொண்டே இருக்க முடியாது— அதற்கான தேவையும் இருந்திருக்காது. எனவே சனாதனம் அவரைச் சிருஷ்டித்தது—ஜாதீயச் சனியன் அவரை உருவாக்கிற்று— பிராமணீயம் அவரை உலகுக்குத் தெரியச் செய்தது— என்பதே உண்மையாகும்.

இங்கு நமது மக்களிடை சமத்துவம் இருந்திருக்குமானால், மற்ற நாடுகளைப்போல் இங்கும் மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வு பேசும் பேதநிலை அறவே இல்லாமல் இருந்திருக்குமானால், அழகிரிதான் ஏன் தோன்றுகிறார், அவரை அறிந்துகொள்ள நமக்குத்தான் வாய்ப்பு எப்படிக் கிடைத்திருக்க முடியும், அத்துறையில் நாம்தான் ஏன் பணியாற்றப்போகிறோம்? வெள்ளையர் ஆதிக்கம் இங்கு இல்லாமல் இருந்திருந்தால், அரசியல் அடிமைத்தனம் இத்துணைக் கண்டத்தைப் பிடிக்காமல் இருந்திருந்தால், காந்தியாரின் சிறப்பை உலகம் அறிந்துகொள்ளவேண்டிய அவசியம்தான் ஏற்பட்டு இருக்க முடியுமா? ஜவகருக்குத்தான் இந்தப் புகழ் கிடைத்திருக்குமா? ஆர்பாட்டம் புரிய பட்டேலுக்குத்தான் இந்த வாய்ப்பு ஏற்பட்டு இருக்குமா? தேவைப்படும் பணியைப் புரிந்தனர், அப்பணியாற்றும்போது ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை முக மலர்ச்சியோடு ஏற்றுக்கொண்டனர், மேலும் மேலும் முயற்சியோடு எடுத்த கருமத்தைத் தொடர்ந்து செய்து வந்தனர், வெற்றியும் கிடைத்தது—அவர்கள் பெயரும்

வரலாற்றில் நிலைத்துவிட்டது. இதேபோலத்தான் அழகிரியின் பணிக்கும் நாட்டில் அதிகமான தேவை இருந்தது. தேவையான பணியைச் செய்ததால், அவர் நமது போற்றுதலுக்கும் இருப்பிடமானார்.

அன்னியனை விரட்டும் போரிலே ஈடுபடுவோருக்குக் கிளம்பும் எதிர்ப்பு ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினரிடமிருந்து மட்டுந்தான். அப்படிக் கிளம்பும் எதிர்ப்பு எவ்வளவு கடுமையானதாக இருந்தபோதிலும், அதனால் போரிடுகிறவர்கள் மனமுடைந்துபோகாமல் இருக்க, நாட்டு மக்களின் நல்லாதரவு ஊக்கமளித்தது. ஆங்கிலேயர் வீசிய அடக்குமுறைகள் கடுமையாகக் கடுமையாக, நாட்டு மக்கள் கொடுத்துவந்த ஆதரவும் பலமடங்கு அதிகரித்து வந்தது. ஆதலால் விடுதலைப்போர் மேலும் மேலும் வளரவும், விறுவிறுப்பில் கூடவும், போர் முகாமில் படைகுவியவும் ஆன சூழ்நிலை உண்டாகியது. ஆவேச உணர்ச்சியே அரசியல் சுதந்திரப்போரின் அடிப்படை ஆயிற்று. 'ஆங்கிலேயன் ஆள்வதா? நாம் அவனுக்கு அடிமையாகி மாள்வதா?' என்ற ஒரு வாசகமே போதியதாக இருந்தது, காங்கிரஸ் நடத்திய அரசியல் போருக்கு. இந்த வாசகத்தின் உண்மை, வெட்டவெளிச்சமாக அனைவருக்கும் தெரியும் வண்ணம் இருந்துவிட்டது.

ஆனால் நமது போர் அத்தகையது அல்ல. வெறும் ஆவேச உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுந்ததல்ல நமது போர். அறிவை—சிந்தனையை மூலமாகக் கொண்டு கிளப்பப்பட்டது நமது போர். உள்நாட்டு மக்களின் மூடமதியை, பிராமணீயத்துக்கு அடிமையாகிக் கிடக்கும் அவலவாழ்வை, கடவுள் என்னும் கற்பனைச் சொல்லில் மயங்கிக்கிடக்கும் மந்தமதிப்போக்கை, மாற்றி அமைக்க எழுந்தது நமது போர். நமது மக்களிடத்திலிருந்தே எதிர்ப்பு கிளம்பும் தன்மை கொண்டது நமது போர். 'ஜாதி ஏதடா?' என்று நாம் கேட்டதும், 'கேட்டது யாரடா?' என்று கோபித்தனர் உயர் ஜாதியினர் எனப்படுவோர். 'புரோகிதர் வேண்டாம்' என்றோம், 'நாஸ்தி

கம் போதும்' என்றனர். 'கல்லிலே கடவுளா?' என்றோம், 'கடவுளை நிந்திக்கும் கயவர்' என்று இகழ்ந்தனர் நம்மை. நமது பகுத்தறிவுப் பணிக்கு நமது மக்களிடம் கிளம்பிய எதிர்ப்பு முனைகளில் சிலவே இவை. 'வகுப்பு வாதம் பேசுகிறோம்—வகுப்புக் கலகத்தை மூட்டுகிறோம்.' என்று சில வஞ்சகர்கள் தூபமிட, அதற்கு செவிசாய்த்த ஆங்கில அதிகாரவர்க்கமும், அடக்கு முறையை வீசி, நமது அறிவியல் போரை அடக்க முன்வந்தது. ஆகவே எதிர்ப்பு, ஆட்சியாளர்களிடமிருந்தும் வந்தது நமக்கு, மக்களிடமிருந்து, பற்பலவித ரூபத்தில், எதிர்ப்பு, நம்மைத் தாக்கியது. நமது பணிக்குள்ள தேவையோ மகத்தானது —குறைத்துக்கூற முடியாதது.

அதிகப்படியான எதிர்ப்புகளுக்கிடையே செய்யக்கூடிய ஒரு தொண்டினை மேற்கொள்ள முன்வர பலர் சம்மதிக்கமாட்டார்கள். அப்படிவரும் ஒருவர் இருவரும் சொந்த மக்களின் கோபக்கனல் வீசியதும், குடும்பத்தினரின் கேலியும் கண்டனமும் கிளம்பியதும், அரசியலாரின் அடக்குமுறை எழுந்ததும், இவையனைத்தையும் எதிர்த்து நின்று பகுத்தறிவுப்பணியாற்ற முடியாமல், மனமுடைந்து, பெட்டியின் பாம்பென மறைவர் அல்லது பகுத்தறிவுப் பிரசாரத்துக்குத் தடை ஏற்படுத்தும் தொண்டினைப் புரிய தம்மை மாற்றிக்கொள்ளினும் கொள்ளுவர். குடும்பத்தின் பகை, ஊர் மக்களின் பகையினும் பலம் பொருந்தியது—நிமிஷந் தவறாமல் தாக்கக் கூடியது—வேதனையை வளர்த்த வண்ணம் இருக்கக்கூடியது—அதிவிரைவில் மனமுறிவை உண்டாக்கக் கூடியது. தாயின் கண்ணீர், தந்தையின் சீற்றம், அண்ணனின் ஆத்திரம், மனைவியின் மடைமை, உறவினர்களின் நையாண்டி, இவ்வளவும் ஒன்றுசேர்ந்து தாக்கும்போது, இந்தத் தாக்குதலிலிருந்து தப்பிப் பிழைத்து, அறிவுப்பிரசாரம் செய்ய ஒருவன் ஆசை கொள்வது என்பது கற்பனைக்கும் எட்டாத விஷயமாகும். தன்மான இயக்கத்தின் பணியும், துவக்கமும் இந்தப் பயங்கரமான தன்மையோடு தொடர்பு கொண்டு இருந்

தவைதாம். இன்றும் இந்தப் பயங்கர நிலை முழுதும்மாறி விட்டது என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும் அதன் வேகத்தின் தரம் குறைந்து விட்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. மேற்குறிப்பிட்ட பயங்கரமான கொடுமையை எதிர்த்து நின்று, பகுத்தறிவுப் பிரசாரத்துக்கு இருந்த எதிர்ப்பின் தரத்தைக் குறைவாக்கி, தனது இலட்சியத்தை மரணத்தறுவாயிலும் நழுவ விட்டுவிடாமல் கடைப்பிடித்து ஒழுகி, உயிர் நீத்த உத்தமன்தான் நம்மில் கலந்துபோன அஞ்சாநெஞ்சன் அழகிரி சாமி.

இரும்புப் பெட்டியிலே எப்படியோ சம்பாதித்த பணமும், பலர் வயிறு எறிய எறிய பிடுங்கிக்கொண்ட ஏராளமான வீடுகளும், குடும்பத்தின் முன்னுள் சிறப்பும், பெற்றிருக்கிறவர்கள் பகுத்தறிவுப் பிரசாரம் புரிவதனால், ஊரார் பகைதான் அவர்களுக்கு ஏற்பட இடமிருக்குமேயன்றி, குடும்பத்தாரின் பகையோ நெருங்கிய சுற்றத்தாரின் பகையோ உண்டாக இடமிருக்காது. பணக்காரத் தன்மை, ஏற்படும் எதிர்ப்பின் சக்தியைக் குறைத்துவிடுகிறது. ஒருவேளை எதிர்ப்பு கூர்அம்பாக இருந்தாலும் வெறும் மலர்க்கணைகளாக அவைகளைக் கொள்ள பணபலம் கொண்ட பகுத்தறிவுப் பிரசாரகர்களுக்கு, அவர்களிடத்திலுள்ள பணம் நெஞ்சுறுதியைத் தருகிறது. ஆதலால், தங்களிடமுள்ள பணச் செருக்கால், உறவினர்களிடத்திலிருந்து பலமான கண்டனம் கிளம்பினாலும், அதனை அலட்சியப்படுத்தி நடந்துகொள்ள, அவர்களால் சுலபமாக முடிகிறது. ஆனால், ஏழையாக உள்ள பகுத்தறிவுத் தொண்டனுக்கு, போதிய பண வசதி இல்லாத காரணத்தால், நெருங்கிய சுற்றத்தார்களின் கண்டனமும் ஏசலும் அளவிலும் தரத்திலும் கூடுதலாகிறது. அதன் விளைவாக உண்டாகும் தாக்குதலும் பலமானதாக இருக்கிறது—ஏழைத் தொண்டனால் தாங்க முடியாத தன்மையில் இருக்கிறது. இந்த நெருக்கடியான நிலையில், கொண்ட குறிக்கோளில் உறுதியான பற்றில்லாதவர்கள், குறிக்கோளை விட்டுக்கொடுத்துவிட்டு, உறவினர்களின்

கோபத்திலிருந்து தப்ப முயற்சிப்பது நடைபெறக்கூடாத காரியமன்று. இதனை அதிகக் குற்றமுடையது என்று கூட சொல்லிவிட முடியாது. ஆனால், அழகிரிசாமி இந்தச் சூழ்நிலையிலும்கூட, கொண்ட கொள்கையைக் கைவிடாமல் உறுதியாகக் கடைப்பிடித்து வந்தார் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும். சுற்றத்தார்களின் எதிர்ப்பினால் ஒருவரின் கொள்கை குலைந்துவிடுவதற்குப் பதிலாக, அழகிரிசாமியைப் பொறுத்தவரையில், அவருடைய கொள்கைப் பற்றை மேலும் உறுதியாக்க உதவிற்று என்று கூறுவதே பொருத்த முடையதாகும்.

அடுப்பிலே சோறு கொதித்துக் கொண்டு இருக்கும், பிள்ளைகள் பட்டினியாலே கதறிக் கொண்டு இருப்பர், இந்தக் கோரக் காட்சியைக் காணச் சகியாத தாய் கண்களைத் துடைத்துக் கொண்டு இருப்பார், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, வேறு எங்கோ தொலைவிலுள்ள ஓர் ஊரில் பகுத்தறிவின் சிறப்பை எடுத்துக் கூறி, பிராமணீயத்தைக் கண்டித்துக் கொண்டு, நமது கடவுளர்களின் காமக் களியாட்டத்தைக் கிண்டல் செய்து காட்டி, பொதுக் கூட்டம் போட்டுப் பேசிக் கொண்டு இருப்பார். இதனைப் படித்ததும் "அழகிரியின் பொறுப்பற்ற தன்மையைப் பாரீர்" என்று பிறருக்குச் சொல்ல முந்துவர் சிலர் என்பதை நாம் அறிவோம். அழகிரிசாமியின் சொந்தக்குடும்பம் ஒன்றுதான், அவரின் கவலைக் குறைவால் வேதனைக் குள்ளாயிற்றே அன்றி, மற்று எத்தனையோ எண்ணத் தொலையாத தமிழர் குடும்பங்கள், அழகிரியின் பொறுப்பான உயர்ந்த பணியினால், நேர் வழி திருந்தி இருக்கின்றன என்பதை எண்ணிப் பாராததால் தான், 'பொறுப்பற்றவர்' என்ற பழிச் சொல்லை அழகிரியின் மீது வீச இரண்டொருவர் முன் வருகின்றனர். அழகிரியின் அரிய பிரசாரத்தால், செப்பனிட முடியாத நிலையில் சீரழிந்து போயிருக்கிறது பிராமணீயம் என்பது மட்டுமல்லாமல், பிராமணீயமேகூட தனது போக்கையும் துறையையும் மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற நினைப்பையும்

பெற்றிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. பகுத்தறிவுப் பிரசாரத்துக்கு இருந்த எதிர்ப்பு சக்திகளின் எதிர்ப்பு முனை இன்று கூர்மழுங்கிப் போயிருப்பதற்கு, அழகிரியின் உழைப்பு பெரிய அளவில் துணைசெய்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அழகிரியின் தொண்டினால், லட்சக் கணக்கில் தமிழர்கள் சனுதனத்தைச் சாடவும், வருணாஸ்ரமத்தை விரட்டவும், ஜாதீய உணர்ச்சியை விட்டுத் தொலைக்கவும் துணிவு கொண்டனர் என்பதை நாம் நினைக்கும் பொழுது, தனது சொந்தக் குடும்பத்தை அழகிரி பாதுகாப்பதில் ஈடுபடாமல் போனது குற்றமானதாகவோ பொறுப்பற்றதானதாகவோ நாம் கூறுவது கூடாது. பயிர்த்தொழில் செய்தோ, கள்ள மார்க்கெட்டில் பணம் தேடியோ, அழகிரி தனது குடும்பத்தை நான்கடுக்கு மாளிகையில் உலாவவைத்து விட்டு மறைந்திருக்கலாம். ஆனால், அவர் ஆற்றிய அரும் பணியால் நாடுபெற்ற விழிப்புணர்ச்சி பூர்த்தி செய்யப் படாமல்தானே இருந்திருக்கும்? அதனை உருவாக்க, கண்ணும் கருத்துமாகக் குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு, பொதுப்பணியும் புரியும் அழகிரி சாமிகள் எத்தனைப் பேர் தேவைப்படுவர் என்பதை நாம் நினைத்துப் பார்த்தால், 'குடும்பத்தைக் கவனிக்கத் தவறினவர்' என்ற குற்றத்தை அழகிரியின் மீது சுமத்த நாம் துணியமாட்டோம். வறுமையோடு போரிட்டுக் கொண்டு, குடும்பத்தை மறந்து, கொண்ட இலட்சிய வெற்றிக்காக, அல்லும் பகலும் இடையறாது உழைத்து, நோய்ப்பிணியோடு கூட்டுறவு கொண்டு, காலத்துக்கு முன்னமே மாணத்துயில்கொண்ட அழகிரிசாமிபோன்ற உண்மை மணிகள் இகழப்படுவதும், தேவைப்படாத குடும்பத்தை உருவாக்கிக் கொண்டும், குடும்ப சொத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொண்டும், பொது வாழ்க்கைத் துறைக்கோ நிலையான களங்கத்தை நீக்க முடியாத தன்மையில் உண்டாக்கிக் கொண்டும் இருப்பவர்கள் போற்றப் படுவதும், கால வேற்றுமையால்— இட வித்தியாசத்தால் சம்பவிக்கும் கோளாறு

களில் ஒன்றாகும். இதனை நேர்படுத்த, இதன் உண்மையை உணர்ந்து தெளிவுபட, மக்களுக்குப் பிரசாரம் புரிய இன்னும் எத்தனை எத்தனையோ அழகிரிசாமிகள் தேவைப்படுகின்றனர் நாட்டிற்கு. விழிப்புணர்ச்சி துளி குறைந்தாலும் அதனால் நாம் அடைவது பக்தியாகத் தான் வந்து முடியும். பக்தி பகுத்தறிவுக்குப் பகையானது என்பதைக் கூறத் தேவை இல்லை.

அழகிரிசாமி என்ற உடனேயே 'அஞ்சா நெஞ்சன்' என்ற சொல் நமது நினைவிற்கு வருகிறதுபோலவே, 'பட்டுக்கோட்டை' என்ற ஊர்பெயரும் நமது எண்ணத்தில் இடம் பெறுகிறது. ஆனால், அவருடைய சொந்த ஊர் பட்டுக்கோட்டை அல்ல என்பது நமக்கு ஆச்சரியத்தைத் தரும். பட்டுக்கோட்டைக்கும் புதுக்கோட்டைக்கும் இடையில் ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அதன் பெயர் **கருக்காக்குறிச்சி**. அந்தக் குக்கிராமத்தில்தான் அழகிரியின் குடும்ப வரலாறு ஆரம்பிக்கிறது.

அழகிரியின் குடும்பம் **கண்டிராஜா** பாரம்பரையைச் சேர்ந்தது. தந்தை பெயர் வாசுதேவநாயுடு. தாயார் பெயர் கண்ணம்மாள். தகப்பனார் வழியாகக் கிடைத்த குடும்பச் சொத்து—பெரிய பூஜ்யம்!

அழகிரியின் தாயார் பிறந்த கிராமத்தின் பெயர் **அம்பட்டம்பட்டி** அல்லது **வாவிடமருதூர்** என்பதாகும். இச் சிற்றூர் மதுரை மாவட்டத்தில் அலங்கா நல்லூர் பகுதியில் இருக்கிறது. தகப்பனார் வாசுதேவநாயுடுபோல பரம ஏழை அல்ல தாயார் கண்ணம்மாள். பிறந்தவீட்டு சொத்து அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் கிடைத்தது. சிறு அளவு நிலம் தோட்டம் ஆக பதினைந்தாயிரம் ரூபாய் மதிப்புடைய சொத்துக்குத் தாயார் கண்ணம்மாள் அதிபதியாகும்.

கண்ணம்மாள் கல்வி அறிவு வாய்க்கப்பெற்றவர்கள். அந்தக் காலத்தில் படிப்பதற்கு காண்டேகார் கதைகளா கிடைக்கும்? அல்லது அறிஞர் அண்ணாவின் சிந்தனை

யைத் தூண்டும் சிற்றேடுகள்தான் கிடைக்குமா? ஏதோ பாரதம், இராமாயணம், பெரிய எழுத்து விக்ரமாதித்தன் கதை, அல்லி அரசாணி மாலை, நல்லதங்காள் கதை போன்ற புத்தகங்களைத்தானே அந்த அம்மாளும் படித்திருக்க முடியும்? எந்தப் புத்தகங்களைப் படித்திருந்த போதிலும், கண்ணம்மாளுக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்பது மட்டும் உண்மையாகும். பெண்கல்வி என்பதையே வேண்டா வெறுப்பாக நோக்கும் நல்லவர்கள் இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள் என்றால், அந்தக் காலத்தில் பெண்கல்வி என்ற பேச்சைக் கேட்டாலே கோபமடைகிறவர்கள்தானே அதிகமாக இருந்திருக்க முடியும்? இந்தக் கால நிலையோடு, அழகிரியின் தாயார் கண்ணம்மாள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்கின்ற நிலையை ஒப்பவைத்துப் பார்க்கும்பொழுது, நாம், நம்மையும் அறியாமலேயே சந்தோஷம் கொள்ளவேண்டியவர்களாகத்தானே இருக்கிறோம். ஆண்களைப் போலவே பெண்களும் படித்துக்கொள்வதில் குற்றம் ஒன்றும் கிடையாது என்ற முற்போக்கான கருத்துக் கொண்டவராகவே கண்ணம்மாவின் தகப்பனார், அழகிரியின் தாய் பாட்டனார் இருந்திருக்கிறார் என்ற உண்மை விளக்கமாகிறது.

அழகிரிக்கு ஐந்தாறு வயது இருக்கும்போதே தகப்பனார் வாசுதேவனார், அழகிரியைக் கண்ணம்மாளிடம் ஒப்படைத்து விட்டு, கடைசி மூச்சை விட்டு விட்டார். அழகிரி ஒரே புதல்வர். அழகிரி இளமையிலேயே தகப்பனாரை இழந்ததைப் போலவே, கண்ணம்மாளும் காலம் வருவதற்கு முன்னரே விதவையாகி விட்டாள். கண்ணம்மாவின் தாயார் உடன் இருந்ததும், அழகிரி சிறியவனாகக் கண்ணையும் மூக்கையும் காட்டிக்கொண்டு ஓடி விளையாடிக் கொண்டு இருந்ததும், கணவன் பிரிந்த துக்கத்தை மாற்ற கண்ணம்மாளுக்குத் துணை செய்தன.

தந்தையோடு கல்வி போம் என்னும் ஓர் அறிவுரை உண்டு. நம் சமுதாய நிலையில் ஆண்களே சர்வாதிகாரிகளாக இருப்பதால், குழந்தைகள் கல்வி கற்பதும், அவர்

களுடைய முயற்சியையே முழுதும் பொறுத்திருக்கும் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. தந்தையார் இறந்துவிடவே, அழகிரியின் கல்வி வளர்ச்சியைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டிய கட்டாயம் தாயார் கண்ணம்மாளுக்கு ஏற்பட்டது. பசுமலையில் இன்றும் உள்ள மிஷின் துவக்கப் பள்ளியில் அழகிரி ஒரு மாணவராக சேர்க்கப்பட்டார். கிறிஸ்துவப் பாதிரிகளால் நடத்தப் பெறும் பள்ளிகளில் ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்குமே முதன்மையான இடம் கொடுக்கப் பெறுவது வழக்கம். பசுமலை பள்ளியும் இந்த விதிக்கு விலக்கல்ல. அழகிரி அப்பள்ளியில் கல்வி பெற்றுங்கூட, அங்கு கையாளப்பட்ட ஒழுங்கு விதிகளால், அழகிரியின் இயல்பை மாற்றிவிட முடியவில்லை. ஒரே மகன் என்பதற்காக, அதுவும் இளமையிலேயே தகப்பனாரை இழந்துவிட்டவன் என்பதற்காக, சிறுவன் அழகிரிமீது, அதிகமாக தாயன்பு காட்டியதின் பலனாகவேதானோ என்னவோ அழகிரி கட்டுக்கடங்காத காளையானான். பள்ளியிலே அடக்கப்பட்ட அல்லது உருவாக்க எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் அழகிரி விஷயத்தில் மட்டும் தோற்றுவிட்டன. பள்ளிக்கு ஓய்வளித்துவிட்டான் சிறுவன் அழகிரி.

அழகிரியின் பாட்டி தாயாரம்மாள் ஒரு ரூபாய்க்கு எத்தனை காலணாக்கள், அரையணாக்கள், அணாக்கள் என்ற விவரம் தெரிந்திராத கர்நாடகம். இந்தக் காலத்திலும் கூட, 'நான்கு ஐந்து' 'ஐந்து ஐந்து' என்று முறையே இருபது 'இருபத்தைந்து' என்று சொல்லத் தெரியாத ஆண்களும் பெண்களும் இருக்கும்போது, அந்தக் காலத்தில் தாயாரம்மாள் இருந்ததில் வியப்பொன்றும் இல்லை. பாட்டி தாயாரம்மாளுக்குத் தெரியாமல் அந்த அம்மாள் வைத்திருக்கும் பணத்தில் இரண்டொரு ரூபாய்களைத் திருடிக்கொண்டு—இல்லை—எடுத்துக்கொண்டு போய், அதனை மாற்றி நான்கணாவிற்குமட்டும் காலணாக்களாகக் கொண்டு வந்துபோட்டு விடுவாராம். 'இப்படி பணத்தை எடுத்து

வந்துவிடுகிறாயே ; பாட்டி கண்டுவிட்டால் கோபிப்பாளே' என்று நண்பர்கள் கேட்டால் மேற்கூறிய விளக்கத்தைத் தருவாரும் சிறுவன் அழகிரி. என்ன இருந்தாலும் வைஷ்ணவ பாரம்பரையைச் சேர்ந்தவரல்லவா அழகிரி !

படிப்பு நின்றதும் என்னாகும்? தட்டிக் கேட்கத் தகப்பன் இல்லாத நிலையிலும், குமரனின் குற்றங்களையும் குணமாகக் கொள்ளும் தாயன்பு வளர்ந்துள்ள நிலையிலும், பாட்டியின் பாசம் பக்கத்துணையாக இருக்கும் நிலையிலும் ஓர் இளைஞன் கடிவாள மில்லாத குதிரையாகத் தானே மாறி விடுவான்? அழகிரியும் அந்த நிலை பெற்றார். இரவு பகலாயிற்று, பகல் இரவாயிற்று. தாயின் புத்தி தகாத உபதேசம் ஆயிற்று. கூட்டாளிகள் போதனை பொழுது போக்குக்கு உற்சாகம் தரும் உறுதுணையாயிற்று. அந்த நேர மனத்திருப்திக்காக, சந்தோஷத்திற்காகத் தனது எதிர் காலத்தைப் பணயம் வைத்து விட்டார் அழகிரி.

எதிர்காலத்தில் என்ன செய்வதென்று தெரியாமல், தாயின் கருணையான சொற்களால் மட்டும் தன் செலவினம் சரிகட்டாமல் இருக்கும் குழப்பத்தில், முதல் உலகப் பெரும்போர் மூண்ட மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, போருக்கு சிப்பாய்கள் சேர்க்கும் பணி முன்னிலும் கூடுதலாயிற்று. அழகிரி சிப்பாயானார். கண்ணம்மாள் தாயல்லவா? கண்கலங்காமலா இருந்திருப்பார்கள்? தாயின் கலக்கம், சிந்திய கண்ணீர் இரண்டும் அழகிரியின் உறுதிக்குமுன் பணிந்துவிட்டது. தன்னுடைய முடிவின் படியே அழகிரி போர்ப்படையில் சேர்ந்து விட்டார். மத்திய ஆசியாவிலுள்ள மேசபடோமியா வரை சென்று போர்ப்பணியில் ஈடுபட்டார்.

வெடிகுண்டு சத்தங்கள், கண்ணுக்கெதிரே குற்றுயிரும் குறையுயிருமாக இருக்கும் பிணக்குவியல்கள், இந்தக் கொடுங் காட்சிகளுக்கிடையே அழகிரி பணியாற்றிய போதுகூட, அவரை ஒருவரும் 'அஞ்சாநெஞ்சன்'

என்று அழைத்ததில்லை. போர்த்துறையை விட்டுவிலகி, பிராமணியத்தை எதிர்த்துப் பகுத்தறிவுக் களம் புகுந்த போதுதான், அவருடைய அஞ்சாநெஞ்சை நாம் தெரிந்து கொள்ள முடிந்தது. துப்பாக்கியோடு எதிர்ப்பதைக் காட்டிலும் மக்களின் மடமையோடு போரிடுவதற்கு அதிக அளவில் அஞ்சாநெஞ்சம் தேவையாகத்தானே இருக்கிறது?

போர்க்கோலத்தைக் களைந்துவிட்டதும் அழகிரி பட்டுக்கோட்டையைத் தங்குமிடமாக்கிக்கொண்டார். அவருடைய சிறிய தகப்பனார் வழக்கறிஞர் வேணுகோபால் அவர்கள், அதுசமயம், அந்நகரில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் பரவுவதில் அக்கறை காட்டி உழைத்துவந்தார். அவருடைய ஆதரவில் அழகிரி சிலகாலம் வளர்ந்து வந்தார். பங்காளி சிறிய தகப்பனாரிடம் அழகிரிக்கு அந்தரங்க அன்பு இருந்ததே ஒழிய, அவருடைய அரசியல் போக்கிலே பற்று இருந்தது கிடையாது. பற்று இல்லாததோடு மட்டுமல்ல, அந்தக் கோட்பாட்டை வெளிப்படையாகக் கண்டித்தும் வந்தார் அழகிரி.

நம்போன்றவர்கள் உடுத்திக்கொள்ளும் ஆடையின் கனத்தைக் காட்டிலும் சிப்பாய்கள் உடுத்திக்கொள்ளும் ஆடை கனத்தில் கூடுதலாகத்தான் இருக்கும். இராணுவத்தில் கனமான ஆடை உடுத்திப் பழகிவிட்டதின் பலனாகத்தானோ என்னவோ கனமான கதர் ஆடைகளையே உடுத்திக்கொள்வது என்ற முடிவிற்கு வந்துவிட்டார் போலும் அழகிரி! இதுபோலவே வேடிக்கையாகக் கூறி இருந்தாலும்கூட, கூறி இருக்கலாம் அழகிரி!

கதர் உடுத்தும் காங்கிரஸ்காரராகக் காட்சியளிப்பதோடு மட்டும் அழகிரி இருந்து விட்டதாக முடிவிற்கு வந்து விடாதீர்கள். சுதர்மத்தைக் காப்பாற்றப் பிறந்த திருமேனியாகவும், அந்தக் காலத்தில் காட்சி தந்திருக்கிறார் அஞ்சா நெஞ்சன்!

தலையிலே கிருப் இருக்கும். எல்லா மயிரின் திட்டத்தைக் காட்டிலும் கொஞ்சம் நீளமாக சில மயிர்கள் உச்சியிலே இருக்கும். நெற்றியிலே நாமம் திட்டப்பட்டு இருக்கும். 'நாராயணன்' அவருடைய நாவில் சமயா சமயங்களில் நர்த்தனம் புரிந்த வண்ணம் இருப்பான். 'சீதையும் ராமரும்' கூட இரண்டொரு சந்தர்ப்பங்களில் அங்கு இடம் பெறுவதுண்டு. கைராட்டையைச் சுற்றி இருக்கிறார் அவரும். தக்களியால் நூல் நூற்று, வேறு நல்ல முறையில் உபயோகமாகக்கூடிய பஞ்சை பாழ் பண்ணினதில் அழகிரிக்கும் பங்குண்டு, பொதுக் கூட்டங்களிலும் பேசுவார் அது சமயத்தில். 'பாரத மாதா' பெயரினால் ஒரு சங்கம் வைத்துக் கொண்டு காங்கிரஸ் பணி புரிந்தவர்தான் நமது அழகிரி.

அழகிரியின் சிறிய தகப்பனார் வேணுகோபால் அவர்கள், பட்டுக்கோட்டையிலும் மற்றும் அப்பகுதிகளிலும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப் பரவ வைத்ததோடு மட்டுமல்லாமல், கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கும் பெரிய அளவில் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார். சிறிய தகப்பனாரின் முயற்சியால் அழகிரி, நகரத்திலுள்ள கோவாப்ரேடீவ் அர்பன் பாங்கியில் ஒரு குமஸ்தாவாக வேலைக்கமர்ந்தார். அந்த வேலையில் அதிகநாள் இருக்கவில்லை நமது அஞ்சாநெஞ்சன். பாங்கு டைரக்டர்கள் கூட்டத்தில் நடைபெற்ற ஒரு சிறு சச்சரவின் காரணமாக குமஸ்தா வேலையைவிட்டு விலகிக் கொண்டார்.

ஆளோ அழகாக இருக்கிறார்; சுதர்மத்தையும் பாது காத்து வருகிறார்; குடும்பத்தை நடத்தவோ பாங்கியில் குமஸ்தாவாகவும் இருக்கிறார்; இந்த நிலையில், அழகிரிக்கு அந்தக்குறை இருந்ததோ இல்லையோ, ஆனால் அவரைப் பார்க்கும் மற்றவர்களுக்கு மட்டும் ஒரே ஒருகுறைஇருந்து வந்தது. என்னகுறை தெரியுமா அது? காலா காலத்தில், அழகிரிக்கும் ஒரு 'கால் கட்டை' கட்டிப்போட்டு வைக்காமல் இருப்பதுதான் அக்குறை.

மிக மூப்படைந்தவர்களாக இருந்தாலும் பாதகமில்லை, கொஞ்சம் பணம் மட்டும் இருந்தால் போதும், மணந்து கொள்கிறோம் என மாதர் மணிகள் பலர் போட்டியிடும் நமது நாட்டில், அழகிரி போன்ற ஆணழகனை மணந்து கொள்ள எந்தப் பெண்தான் பின்வாங்குவாள்? வைதீக வைஷ்ணவர் வெங்கிட சுப்பா (நாயுடு) அவர்கள் அருமை மகளார் ஏதிராஜம்மாள் அழகிரியின் இல்லக் கிழத்தியானார்.

மணம் முடித்த பின்னர், பட்டுக் கோட்டையை அடுத்துள்ள காமாட்சி நாய்க்கன் பாளையத்திலுள்ள மாமனார் வீட்டிற்குக் குடியேறி விட்டார் அழகிரி. அந்தப் பாளையத்தில் இருப்பவர்களில் பெரும்பாலோர் அழகிரியின் சுற்றத்தார்களேயாவர். இன்றும் அங்கிருப்பவர்கள், பூர்வீக வாசனை கெடாமல், வைகுந்தபுரிவாசிகளாகவே இருந்து வருகிறார்கள் என்றால், இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் எப்படி இருந்திருப்பார்களென்பதை யூகித்துத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா? அந்தப் பாளையம் பாற்கடலில் பள்ளிகொண்ட பரந்தாமனின் முகாமாகவே இருந்தது அந்தக் காலத்தில்!

சிறிய தகப்பனாரின் அரசியல் கருத்தில் தான் அழகிரிக்கு மாறுபாடு இருந்ததே ஒழிய, பிராமணீய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன்றுபட்ட நோக்கமே இருந்தது. இதன் பயனாக அழகிரி, பார்ப்பனரல்லாத காங்கிரஸ் வாலிபர் சங்கத்தைக் கண்டார். இதே சமயத்தில் சேரமாதேவி குரு குல போராட்டம் உச்ச நிலையை அடைந்துள்ளது. அப்போராட்டத்தின் சபாநாயகரான டாக்டர் வரதராஜுலு அவர்கள் தன்னுடைய 'தமிழ்நாடு' வார இதழில் பிராமணீயத்தைத் தாக்கி எழுதி வருகிறார். எனவே, பிராமணீய எதிர்ப்பு உணர்ச்சி அழகிரியின் உள்ளத்தில் வேரூன்றி விட்டது.

அஞ்சாநெஞ்சனின் வாழ்க்கையின் முதல் கட்டம் முடிவுற்று, இரண்டாம் கட்டம் தொடங்குகிறது. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் புகுந்து, செல்வர்களின்

செருக்கைக் கண்டு சகியாது, புதியதோர் முகாம் அமைக்க, அழகிரி தன்மானப் பிரசாரத்தைத் தொடங்கி விட்டார். ஏறத்தாழ இத்தருணத்தில் அவருக்கு 'ஞானாசிரியர்' ஒருவர் கிடைத்துவிட்டார். 'ஞானாசிரியர்' யார் என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதனை அறிந்துகொள்ளத் தவறிவிட்டால் அழகிரியை முழு அளவில் தெரிந்துகொண்டவர்களாக நாம் இருக்க முடியாது.

பட்டுக்கோட்டையில் ஒரு மாரியம்மன் கோயில் உண்டு. அந்த மாரியம்மன் ஒரு பூசாரியினால் சிறைபிடிக்கப் பட்டிருந்தது. அப் பூசாரியின் பெயர் பக்கிரிசட்டாம் பிள்ளை. அந்தப்பூசாரி முறையாகத் தமிழ்படித்தவர். இசைப்பயிற்சியும் உடையவர். மிருதங்கம், கெஞ்சரா வாசிப்பதிலும் பழக்கமுடையவர். கூர்மையான புத்தியும் உடையவர். எப்படியோ அழகிரிக்கும் பக்கிரி சட்டாம் பிள்ளைக்கும் சந்திப்பு ஏற்பட்டு விட்டது. பூசாரி பக்கிரியின் குறும்பும் குதர்க்கமும் அழகிரியின் உள்ளத்தைக் கவர்ந்து விட்டன. மாரியம்மனிடம் வரம் கேட்கவருகிற பக்தர்களுக்கு, மாரியம்மனின் வரப்பிரசாதத்தை வாங்கிக் கொடுக்கிற நேரம் போக, மிச்ச நேரங்களிலெல்லாம் அழகிரியின் சிந்தனையைக் கிளறிக் கொண்டு இருப்பதுதான் பூசாரி சட்டாம் பிள்ளையின் பொழுது போக்காக இருந்தது. நாளாக நாளாக மாரியம்மன்கோயில், உண்ணும் நேரம்போக, மற்ற எல்லாநேரத்திலும் அழகிரிக்குத் தங்கு மடமாக மாறிவிட்டது. பகுத்தறிவுப் பாசறையாகப் போய்விட்டது மாரியம்மன்கோயில் என்று கூறுவதே பொருத்தமுடையதாகும். சிறுவயதில், பாதிரிகளின் பள்ளியிலே பெறத் தவறிவிட்ட கல்வியை, மாரியம்மன் கல்லூரியிலே பெற்றுத் தேர்ந்துவிட்டார் அழகிரி!

பூசாரித் தொழிலின் உள் ரகசியங்களை எல்லாம் பூசாரி சுட்டிக்காட்டிவிட்டார். 'கடவுளைக் கல்லாக வைத்திருப்பதே பூசாரிகளின் பிழைப்புக்குத்தான்' என்று சட்டாம்பிள்ளை சண்டமாருதமாகப் பேசுவாராம். 'எங்கள் பிழைப்புக்காகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள

கற்சிலைகளைக் கடவுளரல்லர் என்று எப்படி நாங்கள் கூற முன்வருவோம்' என்றும் பூசாரி 'எஜமான்' அவர்களிடம் கூறுவாராம். அழகிரியை 'எஜமான்' என்றுதான் பூசாரி கூப்பிடுவது வழக்கமாம். லட்சக்கணக்கில் செலவு செய்து கோயில் கட்டிய ராஜாக்கள், மூல விக்ரகத்தை மட்டும் கல்லாலேயே ஏன் செய்துவைத்திருக்கிறார்கள் தெரியுமா? இதற்கு பூசாரி தரும் விளக்கத்தைப் பாருங்கள்:—'மூல விக்ரகங்களை வெள்ளியிலோ தங்கத்திலோ செய்துவைத்திருந்தால், தினம் தினம் கொஞ்சம் கொஞ்சமாக அவைகளை உடைத்து விற்றுவிட்டு இருப்பார்கள். கோயில்களில் சிலைகளும் இல்லாமல்போயிருக்கும் இதற்குள். இந்த நிலை ஏற்படாமல் இருப்பதற்கே கடவுள் சிலைகளைக் கல்லாலேயே ஆக்கிவைத்தார்கள் ராஜாக்கள்' என்பாராம் பக்கிரி சட்டாம்பிள்ளை. இதன் பின்னர், அழகிரியின் பழக்கம் வழக்கம் அனைத்தும் அழகிரியைப் புதிய மனிதராகவே உலகுக்குக் காட்டியது!

ஒருமுறை பூசாரியின் கைசெலவிற்குக் காசு கிடைக்கவில்லை. மாரியம்மன் தீபத்திற்குக் காசு வேண்டுமென்று சாக்குக் கூறிக்கொண்டு, மாரியம்மன் பக்தர்களிடமெல்லாம் சென்று வெறுங்கையோடு மனமுடைந்து திரும்பிவிட்டார் பூசாரி. கோயிலுக்குத் திரும்பிவந்து அங்கிருந்த உண்டியைத் திறந்து பார்த்தார். அதிலே பணம் இருப்பதற்கு பதில் விடலைப்பாம்பு ஒன்று படுத்திருக்கக் கண்டார் பூசாரி. பணம் கிடைக்காத ஆத்திரத்தாலும், பாம்பிருக்கக் கண்ட பயத்தாலும் பக்கிரி சட்டாம்பிள்ளை இரைச்சலிட்டார். அது சமயம் அங்கிருந்த அழகிரி, 'ஏன் சட்டாம்பிள்ளை இரைச்சல் போடுகிறாய்?' என்று கேட்டார். 'எஜமான்' என்று கூப்பிட்டுவிட்டு, பக்கிரி,

**“கடல் வத்திக் கருவாடு தின்ன**
**குடல் வத்தி செத்துச்சாம் கொக்கு”**

என்ற உவமையைக் கூறினாராம். சாகும் வரையில் இந்த உவமையை அழகிரி. அடிக்கடி கூறத் தவறினதே

இல்லை. 'ரதகஜதுரகபதாதிகள், ஓட்டை ஒடசல் செம்பு பித்தாளை பேரிச்சம் பழம், டண்டணர், டஸ்' ஆகிய சொற்கள் அனைத்தும் மாரியம்மன் கோயில் பூசாரியிடம் அழகிரி கற்றுக்கொண்டவையாகும். 'ஏனையா பண்டாரம் ஆண்டி ஆனீர்,' என்று ஒருவர் கேட்க, 'இப்படி ஒரு மண்டலம் இருந்து பார்ப்போம்' என்று ஆண்டி பதில் கொடுத்ததாக அழகிரி கூறுவதும் மாரியம்மன் கோயில் பதிப்புத்தான். அழகிரி போக்கு வேறு வகையில் திரும்பியது ஏறத்தாழ இந்தக் காலத்தில்தான்.

காமாட்சி நாய்க்கன் பாளையம் வைதீகக் கோட்டையாக இருந்ததால், அழகிரியின் 'ஆசாரக் குறைவு'க்கு அங்கு இடமில்லாமல் போய்விட்டது. பாளையத்தை விட்டு வெளியேறிவிட்டார் அழகிரி, தனது மனைவியாருடன். வீடுவேறாயினும் எப்பொழுதும்போல் மாரியம்மன் கோயில்தான் நிரந்தர வாசஸ்தலமாக இருந்தது அழகிரிக்கு. அழகிரியின் யதார்த்தப் போக்கினால் செல்வந்தர்களின் பகை, அதிக சிரமமில்லாமலே அவரை வந்து அடைந்தது. பட்டுக்கோட்டை மேட்டுக்குடியின் நேரடியான விரோதமும் முட்ட ஆரம்பித்தது. அந்தப் பகையினால் அழகிரிக்கு ஆபத்து ஒன்றும் நேர்ந்துவிடாமல் பாதுகாப்பாக இருந்து உதவிசெய்த தோழர்களில் கன்னையன், சௌரிராஜன், விஸ்வநாதம், குழந்தை, டேவிஸ், மருதமுத்து, பேட்டை தர்மலிங்கம் முதலியவர்கள் முக்கியமானவர்களாவர். முதல் குறித்துள்ள இரண்டு தோழர்களும் அழகிரியுடன் நிழல்போல் நீங்காது இருந்தவர்கள் என்பது மிகையாகாது.

வறுமையோடு விளையாடிக் கொண்டிருந்த அழகிரிக்கு, உயிருக்கு உயிரான நண்பர்கள் அமைந்ததும், குறிப்பறிந்து ஏவல் புரிந்துகொண்டு கிடக்கும் எடுபிடிகள் போல் அவர்கள் நடந்துகொண்டதும், வியப்பைத்தரும் முதல்தரமான நிகழ்ச்சிகள்தாம். கேட்கும்போது காசுபணம் என்று பாராமல் கொடுத்து, கூலிக்கு ஆள்பிடித்துத் தன்

அந்தஸ்தை உயர்த்திக்கொண்டு, அதுகண்டு மற்றவர்கள் அச்சங்கொள்ளும் முறையில் அதட்டிப் பேசித்திரிவது, கனதனவான்களால்தான் நடக்கக் கூடிய காரியமேயன்றி, அழகிரி போன்ற ஏழைகளால் நினைத்துப் பார்க்கவாவது முடியக் கூடிய காரியமா?

அழகிரியின் அறிவொளி, நகைச் சுவையை அள்ளி வீசும் அறிவுரைகள், வஞ்சகத்திற்கு இடந்தராத தூய நெஞ்சம், ஏழைகளிடம் காட்டும் குழைவு உள்ளம், அந்தஸ்து பேதம் பார்க்காத சமத்துவப் போக்கு—இத்தனையும், பல இளங்காளைகளை, எப்பொழுதும் அழகிரியின் அருகிலேயே இருக்கச் செய்துவிட்டன. அழகிரி காந்தமானார்—மற்றதோழர்கள் காந்தத்தால் இழுக்கப்பட்ட இரும்புத்துண்டுகளாயினர். இந்த வகையில் இருநூறுக்குக் குறையாத இளைஞர்கள், அழகிரி தொடுத்துவந்த பகுத்தறிவுப் போரின் படைவீரர்களுக்கான பயிற்சியைப் பெற்றுத் தேறிவிட்டனர்.

பணம் படைத்தவர்களுக்குத்தான் எல்லா கௌரவமும் கிடைத்தாக வேண்டும், அவர்களைத் தான் மற்றவர்கள் தோத்தரித்து வாழவேண்டும், என்ற தவறான எண்ணத்தால் தூண்டப்பட்டு, இறுமாப்பான போக்குக் கொண்டிருக்கும் செல்வர்களை, இந்தக்காலத்திலும் பார்க்கிறோம் அல்லவா? இந்தப் பணமூட்டைகளைப் புகழ்ந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே, இவர்கள் காண, மற்றொரு பணம்இல்லாதவனை—ஆனால் அறிவில் சிறந்தோனை—ஆற்றல் மிக்கோனைப் போற்றினால், பொருளற்ற முறையில், அந்த அறிஞன் மீது, இவர்களின் கோபமும், பகையும், தூற்றுதலும் வெகு வேகமாகப் பாய்கின்றன அன்றோ? அதுவுமல்லாமல், அந்த அறிஞனைப் போற்றுகிறவர்களும், மந்த மதியினர், பகுத்தறிவு அற்றவர்கள், என்று பழிக்கப்படுகின்றனர் அன்றோ? இந்த உண்மையை, மற்றக் கட்சித் தோழர்கள் உணர்ந்து கொண்டு இருந்தாலும் இல்லாமற் போனாலும், நமது தன்மானத் தோழர்கள்,

அனுபவ வாயிலாக அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் துளியும் ஐயமில்லை.

இந்தக் காலத்திலேயே இந்நிலை என்றால், அந்தக் காலத்தில், பணம் படைத்தவர்களை, கண்கண்ட 'கடவுள்' என வழிபாடு செய்யும் மனவளம் அதிகப்படியான மக்களிடம் நிரம்பி இருந்த அக்காலத்தில், ஏழை அழகிரியின் பின்னாலே நூற்றுக் கணக்கில் இளைஞர்கள் தொடர்ந்து செல்வதையும், தெருப்புழுதியிலே கோலியாடும் சிறுவர்கள் முதல் சத்தொடுங்கி தெருத்திண்ணையிலே உட்கார்ந்து கிடக்கும் தொண்டு கிழங்கள் ஈறாக, அழகிரியின் பெயரை அறிந்துகொண்டு இருப்பதையும், கேட்டாலும், பிறர் சொல்லித் தெரிந்தாலும், பொறாமை மூண்டெழாமல் இருக்க முடியுமா பணம் படைத்தவர்கள் உள்ளத்தில்.

'இதோ என்னிடத்தில் லட்சக் கணக்கில் பணம் குவிந்து போய் கிடக்கிறது. எனக்கே பொது மக்களின் புகழ் உரித்தாக வேண்டும். எனக்கு நியாயமாகச் சேரவேண்டிய புகழைப் பிறர் பறிக்கப் பார்த்துக் கொண்டு இருப்பதா? பார்த்துக் கொண்டு இருந்தால், பணத்தால் எனக்குக் கிடைக்க வேண்டிய பலன் வீணாக வன்றோ போய் விடுகிறது? நான் இருக்க, என் இரும்புப் பெட்டியில் பாசி பிடித்த பணம் இருக்க, அதனைப் பூஜை செய்ய ஆள் இருக்க, வேகமாக வளர்ந்துவரும் அழகிரியின் புகழை இப்பொழுதே மட்டந்தட்டாமல் போனால், எனக்குத்தான் என்ன பெருமை இருக்கிறது? என் பணத்திற்குத் தான் என்ன மதிப்பு மிச்சமாகும்? அழகிரியோ பஞ்சை! அன்னக் காவடி! என் கண் முன்னால் அவனா புகழப் படுவது? ஏற்றம் பெறுவது? பார்க்கிறேன் ஒரு கை!' என்று கூறிக் கொள்ளும் செல்வச்சீமான்களின் விரோதம் அழகிரி மீது பாய்ந்தது. அழகிரிக்குப் பொதுமக்கள் ஆதரவு வளர வளர உள்ளூர் செல்வர்களின் விரோதமும் வேகமாக வளர்ந்தது.

அழகிரி அஞ்சாநெஞ்சனாகவே இருந்தார். பண மூட்டைகளை நேரடியாகத் தாக்குவதையோ, ஏழை மக்களுக்குப் பரிந்து பேசுவதையோ, பிராமணீயத்தைக் கண்டிப்பதையோ, இதற்குப் பின்னரும் மாற்றிக் கொள்ளவில்லை. பணிந்திருந்தால், தன் வாழ்நாளில் பிற்காலத்தில் இல்லையாயினும், உடனடியாக நிரந்தரமான சுகவாழ்வு பெற்றிருப்பார்— குடும்பமும் கொஞ்சம் நல்லநிலையில் இன்றும் இருந்திருக்கும் அதனால்.

"வறுமை என்னை வாட்டட்டும், வளம் குன்றட்டும், பட்டினிக்கு எனது குடும்பம் பலியாகட்டும், எனக்குக் கவலை இல்லை. ஆனால் இலட்சியத்தைப் பணத்துக்காக விற்று விட்டவன் அழகிரி என்ற பழிச்சொல் என்னையும், என் மக்களையும் சாராமல் இருந்தால் போதும்" என்ற உறுதியோடேயே, செல்வர்களின் ஆசைவார்த்தையை உதறித் தள்ளி நடந்து கொண்டார் அத்தருணத்தில். சாகும் வரை இதே போக்கு அழகிரியிடம் இணைபிரியாது இருந்து வந்தது.

அழகிரிக்கு இருந்த அறிவையும், பேச்சுத் திறத்தையும் எதிரிகளும் கண்டு சிறப்பித்துக் கூறுவர் என்பது மறைக்க முடியாத உண்மையாகும். தேர்தல் காலத்தில் எதிர்கட்சியினர் அச்சடித்து வெளியிட்ட ஒரு அறிக்கையில் கண்டனக் கவியொன்றைக் குறித்திருந்தனர். அந்தக் கவிதையில், அழகிரியைக் குறிப்பிடும்பொழுது,

"அழகிரிதான் பேசவந்தான்
அறிவுடையோன் என்றெண்ணி
அழகி மகன் ரத்தினம் ஏன் பேச
வந்தான்—அழகு அழகு!"

என்று, அழகிரியின் சொற்சுவை சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கிறது எதிரிகளால்.

இந்தக் காலத்தில் அழகிரியின் கரத்திலே எப்பொழுதும் அழகிய தடி ஒன்று இருக்கும். தமிழ் ஆங்கில

தினசரி பத்திரிகைகளை மடித்து வைத்துக்கொண்டு இருப்பார். புத்தகங்களைப் படிப்பதில் அழகிரிக்கு அதிக ஆசை உண்டு. புத்தகங்களை என்ன விலையானாலும் கொடுத்து வாங்குவதிலும் அழகிரி பின்னடைவதில்லை. இப்படி சில காலம் அழகிரியின் பொதுவாழ்வு நடந்து கொண்டு இருந்தது.

ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களில், காலஞ்சென்ற பன்னீர் செல்வம் அவர்களிடம் தான் அழகிரிக்கு அதிகமான பற்று இருந்தது அனேகவிஷயங்களில் பன்னீர் செல்வத்தின் சொல்லும் செயலும் ஒத்திருப்பதை அழகிரி கண்டு மகிழ்ந்தார். செல்வம், தஞ்சை ஜில்லாபோர்டின் தலைவராக இருந்தகாலத்தில் தான், ராஜாமடம், ஒரத்தநாடு போன்ற இடங்களில் இருந்து வந்த தர்ம சத்திரங்களில் பார்ப்பனர்களுக்கே இலவச உணவு கொடுக்கப்பட்டு வந்த அநீதியை மாற்றி, ஜாதிப் பாகுபாடு பாராமல் எல்லா மாணவர்களுக்கும் உணவளிக்கும் ஏற்பாட்டைச் செய்து முடித்தார். இன்னும் இதுபோன்ற எவ்வளவோ நல்ல காரியங்களை செல்வம் செய்து முடித்திருக்கிறார். அவர் செய்ததை மாற்றமுடியாமல், அவரையே பின்பற்றி, அவர்பின் தலைவர்களானவர்களும் நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருப்பதற்கு செல்வத்தின் துணிவான போக்குத்தான் காரணமாக இருந்தது. இதன் பயனாகத்தான் அழகிரிக்கும் செல்வத்திடம் அளவு கடந்த அன்பு இருந்திருக்கவேண்டுமென்று நாம் யூகிப்பது மிகைபடக் கூறியதாகாது.

ஜமீன், மிட்டா, பிரபு, ராஜாபோன்ற செல்வர்களின் கூட்டுறவு அழகிரிக்கு இருந்தபோதிலும், அவர்களுடைய தயவுக்காகவோ, சந்தோஷத்துக்காகவோ, பணத்துக்காகவோ, நயந்தோ பயந்தோ பணிந்து பேசும் பழக்கம் அழகிரி இடத்தில் என்றும் இருந்ததில்லை. ஆனால் மரியாதையாகப்பேச அழகிரி என்றும் தவறியதுமில்லை. அழகிரி இடத்தில் அவர்களுக்கு அளவுகடந்த அச்சம் இருந்தபோதிலும், அழகிரியின் ஆணித்தரமானபேச்சின் சக்தியில்,

அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையும் இருந்தது.

பிரபுக்கள் மாளிகையிலே அழகிரிக்கு ராஜோபசாரம் தான் நடப்பது வழக்கம். இருந்தாலும் அழகிரிக்கு அவ்விடங்களில் தங்கி இருப்பதென்றால் எட்டிக் கசப்பாகத்தான் கசக்கும். வீட்டிலே நீரும் சோறும் சாப்பிடுபவன் கூட, உணவு விடுதியில் தரும் அறுசுவை உணவைக் குறைத்துப் பேசி வெறுத்து வெளியேறுவது போலவே, அழகிரியும் மாளிகைகளை வெறுத்து, தன்னுடைய வர்க்கத்தினர் அதாவது ஏழைத் தோழர்கள் வசிக்கும் ஊர்களுக்கோ, குடிசைகளுக்கோ தான் திரும்பி விடுவார்.

1935-ல் சிலோன் சட்டசபைக்குத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் போட்டியிட்ட ஆமில்டன் துரைக்கும், திருமதி இராஜரத்தினம் அவர்களுக்கும் தேர்தல் பிரசாரம் செய்ய அழகிரி அழைக்கப்பட்டிருந்தார். அழகிரியுடன் நாகை காளியப்பன், நாடியம் குழந்தை, முசிறி கந்தசாமி, மதுரை அருணாசலம் ஆகியவர்களும் கொழும்பு சென்றனர். அங்கே அழகிரி தனது தோழர்களுடன் ஒரு மாதம் தங்கி இருந்தார். இருபத்தைந்து பொதுக் கூட்டங்களுக்கு மேல் பேசி இருக்கிறார். என்ன பேசினார் என்று எண்ணுகிறீர்கள்? பிரிட்டிஷ் துரைக்கு ஓட்டுப் போடுங்கள் என்று பேசினதில்லை. தோட்டத் தொழிலாளர்களிடம் சுயமரியாதை லட்சியங்களை விளக்கிக்கூறிவிட்டு வந்தார். அழகிரியின் வாழ்நாட்களில் 'சிலோன் பயணம்' மறக்க முடியாத இன்பக் காட்சிகள் பல மலிந்த ஒன்றாகும்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பெரும் போரில் அழகிரி, தன் இளமைக்கேற்ப இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றியது போலவே, சில ஆண்டுகளுக்கு முன்பு முடிவடைந்த பெரும் போரில், மாகாணத்தின் பிரதம பிரசாரகராகப் பணியாற்றினார். போர்ப் பிர

சங்கம் புரிவதாகக் கூறிக்கொண்டு, சில சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்கள், புராணப் பிரசங்கங்கள் புரிந்து வந்தனர் என்ற உண்மை, அவைகளைக் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கப் பெறாதவர்களுக்கு, தெரிந்திருக்க நியாயமில்லை. இந்தப் போக்கைப் பின்பற்றாததோடு, நேருக்கு நேராக, தயவு தாட்சண்யம் காட்டாமல், தன்னிடம் இயற்கையாகத் தோன்றும் நகைச்சுவை முறையில், போர்ப்பேச்சில் கலந்துவரும் புராணப் பொய்களைக் கண்டித்து அறிவு கொளுத்துவார் அழகிரி.

இதற்கு எடுத்துக்காட்டாக ஒன்று கூறவேண்டியதும் அவசியந்தானே? போர்ப்பிரசார கூட்டம் ஒன்று திண்டுக்கல்லில் நடந்தது. கூட்டத்திற்கு, அந்தக் காலத்தில் மதுரை ஜில்லா சப் ஜட்ஜாக இருந்த A. S. P. அய்யர் தலைமை வகித்தார். போருக்கு உதவவேண்டுமென்று பொது மக்களைக் கேட்டுக்கொள்ளும்பொழுது, அணிலும் குரங்கும் இராமனுக்குத் துணை செய்ததைப்போல், நாமும் உதவவேண்டும் என்று இராமாயண காலட்சேபம் செய்தார். இந்தக் கூற்றை அழகிரி மிக அழகாக நையாண்டி செய்து காரசாரமாகக் கண்டித்துப் பேசினார். ஜட்ஜ் அய்யருக்குக் கோபம்தான்! ஆனால் அழகிரியா, அதனை ஒரு பொருட்டாக மதிப்பவர்?

அழகிரியின் சுதந்திரக் கோட்பாட்டை விளக்க மற்றோர் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறோம். ஸ்ரீவில்லிபுத்தூரில் யுத்த பிரசார கூட்டத்தை வைத்துக்கொண்டு, கூட்டத்துக்குச் சில மணி நேரத்திற்கு முன்பு, பசுமலையில் அவர் குடியிருந்த வீட்டுக்குப் போய், கூட்டத்திற்கு வரும்படியாக, மதுரை ஜில்லா கலெக்டர் அழகிரியை அழைத்தார். முன்னறிவிப்பில்லாமல் அழைக்கப்படுவதால், தான் வர முடியாது என்று கண்டிப்பாக அழகிரி கூறிவிட்டார். கலெக்டர் எவ்வளவோ மன்றாடியும் முடிவை மாற்றிக் கொள்ள அழகிரி மறுத்துவிட்டார்.

ஜஸ்டிஸ் கட்சியின் நிர்வாகக் குழுவினர் கூட்டம் ஒன்று, கட்சியின் தலைவர் பொப்பிலி ராஜா தலைமையில், மதுரையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய அழகிரி, பொப்பிலிராஜாவைக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்பட்ட பொழுதெல்லாம், "**தோழர் பொப்பிலி**" என்றே குறிப்பிட்டார். இதனால் பொப்பிலியின் முகத்தில் கொஞ்சம் மாறுதல் தோன்ற ஆரம்பித்தது. இதனைக் கண்ட காலம் சென்ற செ. த. நாயகம் அழகிரியின் போக்கை ஜாடை மாடையாக மாற்ற முயன்றார். இருந்தாலும் அழகிரி "தோழர் பொப்பிலி" என்று குறிப்பிடுவதை மாற்றிக்கொள்ளவில்லை. அழகிரியின் கோபத்தைத் தான், தன்னுடைய முயற்சிக்கு செ. த. நாயகம் வெகுமதியாகப் பெற்றார். அழகிரி மனிதன் என்ற ஒன்றுக்குத்தான் மதிப்பளிப்பவரேயன்றி, பணத்துக்கோ, ஒருவர்க்குள்ள பதவிக்கோ, செல்வாக்கிற்கோ மதிப்பளிக்கக் கூடியவரல்ல என்பதற்கு, இந்த சம்பவம் ஒன்றே போதுமானதாகும்.

குடும்பம் பெருகப் பெருக, வறுமையும் வாட்டமும் வளர்ந்து கொண்டே வந்தன. குடும்பக் கவலை ஒரு பக்கம், வேளா வேளைக்கு நல்லுணவு இல்லாமல் ஊர் ஊராய்ச் சுற்றி அலைந்து மற்றோர் பக்கம். தினம் தவறாமல் மணிக் கணக்கில் தன்மானப் பிரசாரம் செய்தது இன்னொரு பக்கம், வாலிப சேட்டை வேறொரு பக்கம், அழகிரியின் இளமையைத் தாக்கித் தகர்த்து வந்தன. இளமை வெகு வேகமாகத் தேய்ந்து வந்தது, உடல் மெலிந்தது— நலிந்தது. தீரா நோய்கள் பல பயிராகும் புஞ்செய் நிலமாயிற்று அழகிரியின் வாலிபத் தேகம்.

கண்ணைக் கவரும் முறையில் தழதழஎன்று இருக்கும் மாந்துளிரை இளஞ்சூடு தாக்கினாலே போதும், அது, துவண்டு நிறம்மாறி நிலை குலைந்து நிற்கும். முற்றின மாவிலையை செந்தணல் தீண்டினாலும், மாந்துளிர்போல்

அவ்வளவு விரைவில் தன்மை மாறிவிடாது. காலம் வருவதற்குமுன்னமே, உள் அவயவங்கள் உருவாகி வலிமைபெறுவதற்கு முன்னமே, டீணிக்கணக்கில் சொற்பொழிவாற்றும் பெரும் பணியை தன்மீது போட்டுக்கொண்டார் அழகிரி. இதனால், இளஞ்சூடு அண்டினதும் இருந்த நிலை கெட்டு விடும் மாந்துளிர் போல், இளமையிலேயே ஏற்றுக்கொண்ட பெரும் பணியினால், தீராத நோய்களால் பிடிக்கப்பட்டு, வாலிபத்திலேயே வயோதிகராக மாறி, அகாலத்திலேயே துஞ்சிவிட்டார் அழகிரி.

இதற்கு மாறாக, தன்னுடைய நாற்பதாவது வயதில் பொதுவாழ்வில் புகுந்து, அழகிரி ஆற்றிய தொண்டைக் காட்டிலும் குறைந்த அளவு தொண்டாற்றி, எழுபதாண்டாகியும் தொண்டாற்றும் தகுதியுடன் ஒருவர் இருப்பதில் பெருமை அடையக்கூடியதோ, ஆச்சரியப்படக் கூடியதோ ஒன்றும் கிடையாது.

இளஞ் சிறுவர்களுக்கு அவர்கள் சக்திக்கு மீறிய உழைப்பைக் கொடுப்பதால், அவர்கள் வளர்ச்சி கெட்டு விடுகிறது என்பதும், அதனால் காலம் வருவதற்கு முன்னமே அவர்கள் கிழமாகி விடுகிறார்கள் என்பதும், உடல் நூல் வல்லுநர்கள் கண்டறிந்த உண்மையாகும். சின்ன வயதில், நல்ல ஆகாரம் இல்லாமல், அதிகமான உழைப்பும் உழைத்து, அலைந்து திரிந்ததனால் தான், அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி, தன்முதிர்ந்த வாலிப பருவத்தில், நமக்குத் துக்கத்தைக் கொடுத்துவிட்டு, நம்மை விட்டு நீங்கி விட்டார் என்பதே, அழகிரியின் அகால மரணத்திற்கான முழு உண்மையாகும். இந்த வேதனை தரும் உண்மையை கூட்டுத் தோழர்கள் கருதாமல் இருக்க வேண்டுமென்ற வஞ்சகத்தாலேயே, வெவ்வேறு காரணத்தைக் கூறுகிறார்கள் சில விஷமிகள், அழகிரியின் வாலிபப் பிரிவிற்குக் காரணங்கள் என்று. சொற்பொழிவாற்றுவதிலே அதிகப் பயிற்சி உள்ளவர்களுக்குத்தான் இந்த உண்மை நன்கு புலனாகும்.

அழகிரி எத்தனை எத்தனையோ தடவைகளில் நோய் வாய்ப் பட்டிருக்கிறார். அவருடைய பொது வாழ்வே பிணியுடனும் வறுமையுடனும் இணைந்து வளர்ந்து வந்தது தான். பிணியின் பிடியிலே சிக்கிச் சீரழிந்தாலும் சரி, இல்லாமையால் இடர்ப்பட்டாலும் சரி, அழகிரி தன்னுடைய இலட்சியத்தை மட்டும் என்றும் ஒரு துளியும் தளர்த்திக் கொண்டது கிடையாது.

அழகிரி கடைசி மூச்சை விடுவதற்கு இரண்டு திங்களுக்கு முன் தாம்பரம் சானடோரியத்தில் தங்கி இருந்தார். அதிகச் செலவுதான்.

சானடோரியத்தில், அறிஞர் அண்ணாதுரை, தன் தோழர்களான W. K. தேவராஜன், S. V. லிங்கம் ஆகியவர்களுடன் அழகிரியைச் சந்தித்தார். அதுசமயம் அழகிரியின் உடலிலிருந்த குருதியின் பெரும் பகுதி குறைந்துபோய், நீர் ஏறி, கைகால்கள் வீங்கிக் கிடந்தன. அஞ்சாநெஞ்சனைத்தான் காணமுடிந்ததேயன்றி அழகர்சாமியைக் காணமுடியாமல் போய்விட்டது.

"வா லிங்கம் — வா அண்ணாதுரை!" என்று வாய் நிறைய அழைப்பதற்கான திடம்கூட, இருபது ஆண்டுகளுக்கு அதிகமாக, தமிழ் நாடெங்கும் பம்பரம்போல் சுழன்று, இடியோசையென முழங்கி வந்த மாவீரனுக்கு, அது சமயம் இல்லாமல் போய்விட்டது. கூறினான் — மனந்திறந்து காட்டினான் — "அண்ணா! தலைவர் வந்தார் — மரணப்படுக்கையில் குற்றப்பத்திரிகை வாசித்தார் — நான்கு நாட்களில் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்றார் — நாட்கள் எட்டாயின — திரும்பி வரவில்லை!" என்று. கண்களில் நீர் பெருகும் — நெஞ்சு நெகிழும் — இதனை அழகிரி கூறிடக் கேட்ட எவருக்கும். அறிஞர் முயன்றார், அழகிரியை அந்த மருத்துவ விடுதியிலே இருக்க வைக்க; அதற்காகும் செலவனைத்தையும் ஏற்றுக் கொள்வதாகவும் வாக்குறுதி அளித்தார் மருத்துவரிடம். மருத்து

வர் முடிவு கூறிவிட்டார், அழகிரி மரணத்தின் பிடியிலே சிக்கிவிட்டார் என்று.

அன்று இரவே அழகிரி மருத்துவ விடுதியில் இருந்து வெளியேற்றப்பட்டு, தஞ்சைக்கு ஒரு இரண்டாம் கிளாஸ் இரயில் டிக்கெட் வாங்கிக் கொடுக்கப்பட்டு, புகைவண்டியில் ஏற்றப்பட்டு, தஞ்சைக்குப் புறப்பட்டு விட்டார். தன் மனைவியாரையும் உடன் வைத்துக் கொள்ள அதற்கான இரயில் கட்டணத்தைக் கொடுக்க பணமில்லாத காரணத்தால், மனைவியாரை மூன்றாம் வகுப்பு வண்டியில் ஏற்றிவிட வேண்டியதாக இருந்தது.

அஞ்சாநெஞ்சனை மருத்துவ விடுதியில் கண்டுவிட்டுத் திரும்பிய அறிஞர் அண்ணாதுரை, அழகிரிக்கு ஏற்பட்ட பணத்தேவை என்னும் கொடுந் தாக விடாயைத் தீர்த்து வைக்க, வழியிலே கண்ட கானல்நீரைத் துரத்தி வேட்டை ஆடினார். வெறும் கானல் தானே? பருக நீர் அதில் ஏது?

அறிஞர் அண்ணாதுரை, தன்னுடைய வாழ்நாட்களில் எந்தவித சொந்த சுகத்தை முன்னிட்டும், பிறரிடம் ஒரு காலணாவும் கொடுங்கள் என்று கேட்டறிந்த பழக்கமில்லாதவர். இருந்தாலும் துணிந்துவிட்டார். இந்தத் துணிவு அவருக்கு ஏற்படுவதற்கு முன்னால், உண்மையிலேயே அவருடைய உள்ளம் ஒரு போர்க்களமாகத் தான் இருந்திருக்கும் என்பதில் ஒரு துளியும் ஐயமில்லை.

தோழர் W. K. தேவராஜன் அவர்களிடம் ரூ 250 கடனாக வாங்கி எடுத்துக்கொண்டு, தாம்பரம் புகைவண்டி நிலையத்திற்குச் சென்று, இரண்டாவது வகுப்பில் உட்கார்ந்திருக்கும், அழகிரியை அறிஞர் சந்தித்தார். அழகிரி எதிர்பாராத சந்திப்பு அது. அழகிரியின் கண்விழிகள் தம்மை மூடி இருந்த நீர்க் கவசத்தை ஊடுருவிக்கொண்டு, அண்ணாதுரையின் மீது பாய்ந்தன. அண்ணாதுரை அதிகம் தாமதிக்காமல், சிறு தொகையை அழகிரியிடம்

நீட்டினார். இருகை ஏந்திவாங்கினார் அதனை அஞ்சா நெஞ்சன். செல்வச் சீமான்கள் தந்த பணத்தைத் தன் இடது கையினாலேயே வாங்கி வாங்கி பழகிவிட்ட அழகிரி அறிஞர் கொடுத்த தொகையை இருகையேந்தி வாங்கினது பொருள்புதைந்த அற்புதம் தானே?

அண்ணாதுரையின் செயல்—போக்கு, அழகிரிக்குத் திகைப்பைக் கொடுத்தது; வாயிருந்தும், பேச ஆசையிருந்தும் பிறவி ஊமையானார் அழகிரி. 'நாடுதிருத்திய நல்லவன், மக்கள் விழிப்புக்கொள்ள மார்க்கம் தேடிய மா வீரன், அவன் உழைப்பால் உயர்நிலை பெற்றோர் உல்லாசபுரியில் உலாவிவரும் வேளையில், தன் இயலாத நிலையில் இருகையேந்தி ஏங்கிக் கிடப்பதா, என்ன நிலையடா இது' என்ற எண்ணம் அறிஞர் உள்ளத்தில் உருவாகி, அவரையும் பேசாதிருக்க வைத்துவிட்டது. மௌனம் நிலைத்தது. பிரிவும் நேர்ந்தது. புகைவண்டியும் அழகிரியைத் தூக்கிச்சென்றுவிட்டது.

பட்டுக்கோட்டைக்குத் தோழர் மதியழகன், அறிஞர் கொடுத்த ரூ. 400-ரையும் எடுத்துக்கொண்டு சென்றார். அழகிரியிடம் அத்தொகையைக் கொடுத்தார். அழகிரி கண்டு மகிழ்ந்தார். பலப்பல கூறினார். அதில் ஒன்றை மட்டும் குறிப்பிடுகிறோம்.

**"மதியழகா! பணமல்ல முக்கியம்—அதில் மறைந்து கிடக்கிறதே மனம் அதுதான் முக்கியம். 'முன்னாள் தோழன் ஒருவன் உதவி கிடைக்காமல் உயிருக்குப் போராடிக்கொண்டு கிடக்கிறான்—அவனுக்கு உதவ வேண்டும்'—என்று மறந்துவிடாமல் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து உதவி செய்ய முன்வந்தானே அண்ணாதுரை—அதற்காக அந்தப் பேருள்ளத்தை நான் போற்றுகிறேன்—எனது மகிழ்ச்சியைக் கூறு அண்ணாதுரையிடம்!"**

**"உண்மையான நண்பன் யார்—பகைவன் யார் என்பதை நான் உணர்ந்துகொண்டேன்—மதியழகா! இதனையும் கூறு."**

அழகிரியின் பெயருக்கு ரூ 100 அனுப்பிவிட்டு, தன்னை அழைத்தால் கூட்டங்களில் பேசத் தயாராகவே இருக்கிறேன் என்று அறிஞர் திருச்சி கூட்டத்திலே வெளிப்படையாகக் கூறினார். அதன்படியே சில பல கூட்டங்களில் இருந்து அழைப்பும் கிடைத்தது. இந்த நிபந்தனையின் முழுப் பலனையும் அடைவதற்கு முடியாமல் அழகிரி இறுதி மூச்சை விட்டுவிட்டார்.

நகைச்சுவை அரசர் N. S. கிருஷ்ணன், தஞ்சையிலே ஓர் இசை அரங்கு ஏற்பாடுசெய்து, அதில் உருவானது போதாமல் போகவே, தன் சொந்தத்தில் பெருந்தொகையைப்போட்டு ரூ 6000த்தை அழகிரியின் குடும்பத்துக்குக் கொடுத்து, கடனில் இருந்த அழகிரியின் குடும்ப சொத்துக்களை மீட்டு உதவினார். அதற்கான முயற்சியில் ஈடுபட்ட தோழர் T. P. பொன்னுசாமி, மற்றுமுள்ள தஞ்சை இயக்கத் தோழர்களையும் மறந்துவிடுவதற்கில்லை.

ஓவியக் கலைஞர்களான பாலு சகோதரர்கள், அழகிரியின் உருவத்தை, தேவையானபோதெல்லாம் அப்படியே எழுதித் தந்து, இயக்கத் தோழர்களுக்கு, அழகிரியின் நினைப்பு மாறாமல் இருக்க, எச்சரிக்கை செய்துகொண்டிருப்பதற்காக, அவர்களுக்கு, என்றென்றைக்கும், தன்மானத் தோழர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அழகிரியின் தாயார் கண்ணம்மாள் சில திங்களுக்கு முன்தான் இறந்துவிட்டார்கள். மனைவியார் எதிராஜம்மாள் இருக்கிறார்கள். பெரிய மகன் பெயர் **இராமமூர்த்தி**; அதற்கடுத்தவன் **துலீப்**. இரண்டு ஏற்கனவே பிறந்து இறந்துவிட்டன. மூத்த மகள் **தயாளு** பக்குவமடைந்து இருக்கிறாள். **பேபியும், புஷ்பராணியும்** கல்வி கற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இவர்களைத்தான் அழகிரி நமது பாதுகாப்பில் விட்டுப்போய் இருக்கிறார். நம்மீது அழகிரி கொண்டிருந்த நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்தான் என்பதை நாம் உலகுக்கு மெய்ப்பித்தாகவேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இதனை மறந்து நாம் நடந்து

கொள்ளுவோமேயானால், நாம் அவரியக்கத்தினர் என்று சொல்லிக்கொள்வதில் பொருளே கிடையாது. நமது நெஞ்சே நம்மைத் தொடர்ந்து குற்றம் கூறிக்கொண்டே இருக்கும்.

அழகிரியின் உழைப்பு நாம். அழகிரியின் உழைப்பால், நமது உழைப்பிற்கு ஏற்படும் எதிர்ப்பு எத்தனையோ மடங்கு குறைந்துபோய் இருக்கிறது. இந்த நல்லநிலை இருந்தும் கூட, கட்சி, அழகிரிக்கோ, அவர் குடும்பத்திற்கோ செப்பாலடித்த காசும் உதவிசெய்ய முன்வரவில்லை. ஆலைத்தொழிலாளிக்குக் கூட ஆண்டு ஒன்றுக்கு இரண்டு மூன்று திங்கள் கூலியை இனாம் தொகையாகக் கொடுக்க முதலாளிகள் முன்வருகிறார்கள். ஆனால் கட்சி, சன்மானம் கொடுக்காமல் தொண்டனின் உழைப்பை எல்லாம் உறிஞ்சிக்கொண்டு, உச்ச நிலையில் அமர்ந்து கொண்டு, உபதேச காண்டம் படித்துக் கொண்டு இருக்கிறது. முதல் தரமான முதலாளித்துவம்!

28-3-49 மாலை தஞ்சையில் அஞ்சாநெஞ்சன் அழகிரிசாமி உயிர் நீத்தார். தஞ்சை என்றும் கண்டிராத அளவுக்கு, திரள் திரளான மக்கள் கூட்டத்தினிடையே, அழகிரியின் உடல் இடுகாடு தூக்கிச் செல்லப்பட்டு, அடக்கம் செய்யப்பட்டது. இது வகையில் தஞ்சை தோழர்கள் பாக்கியசாலிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

அழகிரிசாமியை முதல் முதலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது முதல், இறந்த இந்நாள் வரையிலும் அழகிரியின் குடும்பத்தினருக்கு, பலவகையினும், துணையாக இருந்து உதவிபுரிந்து வந்த,—வரும் பேராவூரணி தோழர் குழந்தை அவர்களுக்கு நாம் அனைவரும் கடமைப்பட்டு இருக்கிறோம்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

பிரீ பிரன்டர்ஸ், 147, பவழக்காரத் தெரு, சென்னை 1.